# ஏன் இந்த வேகம் என்னும் சிறுகதை - ஒரு மதிப்பீடு
## En Intha Vegam?: An Evaluation

Dr Uma Allaghery

"TAM 2001 Y (3) 5.2 En Intha Vegam: An Evaluation (PPT) " by Dr Uma Allaghery(2024), Mahatma Gandhi Institute is licensed under CC BY 4.0

# லட்சுமி என்பவரைப் பற்றிய விவரங்கள்

- மகப்பேறு மருத்துவரான லட்சுமி என்பவர் 'ஏன் இந்த வேகம்'? என்னும் சிறுகதையைப் படைத்துள்ளார். அவருடைய இயற்பெயர் திரிபுரசுந்தரி என்பது ஆகும். இவர் சென்னை ஸ்டான்லி மருத்துவர் கல்லூரியில் மருத்துவர் பட்டம் பெற்றுள்ளார். அவர் 'தாய்மை' என்னும் மருத்துவ நூலைப் படைத்துள்ளார். அவர் பத்து ஆண்டுகளாகத் தென்னப்பிரிக்காவில் மருத்துவர் பணி ஆற்றினார் எனக் குறிப்பிடத்தக்கது. அவர் 1977ஆம் ஆண்டில் தென்னாப்பிரிக்காவிலிருந்து சென்னைக்குத் திரும்பினார். அப்போது அவர் மருத்துவர் ஆலோசகர் என்ற பணியை மேற்கொண்டார். மேலும் அவர் பத்திரிகைகளில் தம் ஆலோசனைகளை எழுதத் தொடங்கினார்.

# லட்சுமி படைப்புகளில் பெண்மை

- எழுத்தாளர்கள் பலர் பெண்களுடைய நலன் பற்றிய கருத்துக்கள் தங்கள் படைப்புகளில் வெளிப்படுத்தினார்கள். பெண்களுக்கு நல்ல வாழ்க்கை அமைய வேண்டுமென்றும் வாழ்க்கையில் முன்னேற வேண்டுமென்றும் எனப் பலவாறு படைப்புகள் காட்டுகின்றன. அவ்வகையில் பெண் எழுத்தாளரான லட்சுமி பெண்ணை மையப்படுத்தித் தம் படைப்புகளைப் படைத்துள்ளார். பெண்களுக்கு ஏற்பட்டுள்ள துன்பங்களையும் சிக்கல்களையும் தம் சிறுகதைகளையும் நாவல்களையும் சாதனங்களாகக் கொண்டு நெறிபடுத்தியுள்ளார்; ஆலோசனை கூறியுள்ளார்; துணை புரிந்துள்ளார்.

# ஏன் இந்த வேகம்? என்னும் சிறுகதை

- இந்தச் சிறுகதையில் முதன்மைப் பாத்திரமாக விளங்குகிறாள் தாரணி. இவள் ஓர் இளம் பெண். ஆனால், அவளுக்கு இருதய நோய் உள்ளது. மேலுலகத்துக்குப் போவது ஏன் இந்த வேகம் என வருத்தத்துடன் எண்ணுகிறாள். அவளுடைய வாழ்க்கை இனிதாக அமையவில்லை. காதலில் அவளுக்கு ஏமாற்றம் ஏற்பட்டுள்ளது. இதனால் வீட்டிலுள்ள அப்பாவும் அண்ணன்மார்களும் அவளை ஒடுக்கி வைத்தார்கள். அவளுடைய செயலால் ஊரில் அவளுடைய குடும்பத்தினருக்கு அவமானம் ஏற்பட்டுள்ளது. ஆண் ஆதிக்கத்தால் அவள் அவதிப்படுகிறாள்.

# ஏன் இந்த வேகம்? என்னும் சிறுகதை

- தாரணி ஒரு நோயாளி என்று வீட்டு ஆண்களுக்குத் தெரிந்தும் அவள்மீது கருணை காட்டவில்லை. பணியில் அமர்ந்த அவள் குடும்பத்துக்கு அவமானம் ஏற்பட்ட பிறகு அவளைப் பணிக்கு அனுப்பவில்லை. அவள் வீட்டு வேலைகளைக் கவனிக்க வேண்டியிருந்தது. வீட்டில் அண்ணி இருந்தாலும் அவள் எதுவுமே செய்வதில்லை; தாரணிக்குத்தான் எல்லா வீட்டுவேலைகளையும் கவனித்துகொள்வதன் தண்டனை கிடைத்தது.

# ஏன் இந்த வேகம்? என்னும் சிறுகதை

- தாரணியுடைய அம்மா மட்டும் தம் மகளுடைய நலனுக்காகக் கோயில் கோயிலாக அலைத்தார். தம் மகளுடைய நோயைக் குணப்படுத்திக்கொள்ளவும் திருமணம் நடைபெற வேண்டும் எனவும் இறைவனிடம் வேண்டிக்கொண்டார். இருதய நோய் தொடர்பாக, அவர் மகளைச் சென்னைக்குக் கூட்டிப் போயிருந்தார். ஆனால், அவள் கர்ப்பமாக இருந்தால், சென்னைக்குப் போனாள் என்ற வதந்தியைப் பரப்பியுள்ளாள் அவளுடைய அண்ணி. இக்கதையில் பெண்ணே பெண்ணுக்கு எதிரியாக இருக்கிறாள் எனப் புலப்படுத்துகிறது.

# ஏன் இந்த வேகம்? என்னும் சிறுகதை

- கேசவன் என்பவன் ஒரு வஞ்சகன். அவனுக்குத் திருமணமாகியும் தாரணியை ஏமாற்றினான். அவளை மிரட்டி வெளியூருக்குக் கூட்டிப் போனான். ஆனால், அவன் நல்லவனாக நடித்தான். அவள்மீது பழி சுமத்தினான். இதனால், தாரணி பட்டபாடு அவளுக்கே தெரியும். ஆண் ஆதிக்கமுள்ள சமுதாயத்தை மாற்ற வேண்டும் என விரும்பியுள்ளார் பெண் படைப்பாளராகிய லட்சுமி. இதற்கு, சான்றாக, “ஆணுக்கொரு நியாயம். பெண்ணுக்கு ஒரு நியாயம் வழங்கும் அக்கிரமமான சமுதாயப் பார்வையிலே அவள் அழிந்து போனவள், தவறு செய்தவள் –” என ஏன் இந்த வேகம் என்னும் சிறுகதையில் சுட்டிக்காட்டுகிறார்.

# ஏன் இந்த வேகம்? என்னும் சிறுகதை

- பள்ளித் தலைமையாசிரியர் தாரணிக்கு உதவி செய்தார். அவள் குணமாகிவிடுவாள். அதனால், உடனடியாக மறுபடியும் சென்னைக்குப் போய் அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டுமென்று கூறித் தாரணிக்கு ஆதரவு கொடுத்தார். எதிர்காலத்தில் அவளுக்கு ஒரு நல்ல வரன் கிடைக்குமென்றும் ஒரு நல்ல இல்லற வாழ்க்கை அவளுக்கு அமையுமெனவும் கூறி அவளை வாழ்த்தினார். அவளுக்கு ஒரு நல்ல எதிர்காலம் இருந்தது என உளவியல் ரீதியாக அறிவுறுத்தினார். நடந்ததை மறந்துவிட்டு, எதிர்கால வாழ்க்கை அவளுடைய கையில்தான் இருக்கிறது என அறிவுரை கூறினார்.

# ஏன் இந்த வேகம்? என்னும் சிறுகதை

- இக்கதை எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது. பாரதியார் பாடல்களை உத்தியாகப் பயன்படுத்தியுள்ளார் எழுத்தாளர் லட்சுமி. பாரதியார் பெண்ணுடைய நலத்தைக் கருதிப் பல பாடல்கள் பாடியுள்ளார். அவ்வகையில் எழுத்தாளர் லட்சுமி பாரதியார் பாடலை இக்கதையில் சேர்த்துள்ளதாகத் தெரிகிறது. மேலும், பறவை என்ற குறியீட்டைப் பயன்படுத்தியுள்ளதாகத் தெரிகிறது. பறவை சுதந்திரமாக எங்கே வேண்டுமானாலும் பறந்துபோகலாம். ஆனால், அவளுடைய அப்பாவும் அண்ணனும் தாரணியைக் கைதி மாதிரி வீட்டுக்குள்ளே அடக்கி வைத்தனர்.

# ஏன் இந்த வேகம்? என்னும் சிறுகதை

- தாரணியுடைய தோழியான மல்லிகா ஒரு துரோகி. அவளுடைய கணவன்தான் தாரணியைக் கெடுத்தான். அவள் தன் கணவனைக் கண்டிக்காமல் தாரணிமீது பழி சுமத்தினாள். தாரணிதான் தன் கணவனோடு உறவு வைத்துள்ளாள் என்ற வதந்தியை ஊரில் பரப்பிவிட்டாள். கணவன் கேசவன் தாரணியைக் காதலித்தான் என்று எடுத்துச் சொன்னபோது அவள் இதை ஏற்றுக்கொள்ளவில்லை.

# ஏன் இந்த வேகம்? என்னும் சிறுகதை

- தாரணியுடைய மன வேதனையுடன் துவங்கிய இக்கதை கடைசியில் ஒரு நல்ல முடிவுடன் முடிகிறது. தாரணியுடைய வாழ்க்கை பாழாக்கவில்லை. பள்ளித் தலைவியாகிய செல்லம்மாள் அவளுக்குத் துணையாக நின்றார். "வாழ்க்கை வாழ்வதற்குத்தான் - சாவதற்கல்ல," என்று கூறித் தாரணிக்கு ஊக்கம் அளித்தார் செல்லம்மாள். பள்ளி அளவில் ஏற்பாடு செய்யப்படும் என்றும், "ஒருவருக்கு உடம்பில் எந்தப் பாகத்தில் ஊனமிருந்தாலும் அதைத் திருத்தியமைத்து அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க வேண்டியது ... சமுதாயத்தில் உள்ள ஒவ்வொருவருடைய கடமை ஆகும்," என்றும் தரணிக்குக் கூறியுள்ளார்.

# ஏன் இந்த வேகம்? என்னும் சிறுகதை

- படைப்பாளர் லட்சுமி பெண்ணுடைய சிக்கல்கள் நன்கு அறிந்தவர். தாரணியுடைய மனக் கசப்புக்கும் வேதனைக்கும் ஒரு முற்றுப்புள்ளி போட்டார். வாழ்க்கையில் பல வகை அனுபவங்கள் உள்ளன. அவற்றை மன உறுதியுடன் பார்த்துக்கொள்ள வேண்டும். பெண்களுக்குத் தாயாகவும் தோழியாகவும் வழிகாட்டியாகவும் நின்று, தாம் அளித்துள்ள அறிவுரைகள் போற்றத்தக்கன.

# முடிவுரை

- பாரதியார் என்பவர் பெண் நலனையும் ஆண் பெண் சரிநிகரையும் பல கவிதைகளில் பாடியுள்ளார். எழுத்தாளர் லட்சுமி பாரதியாரின் நோக்கத்தை அடைய இச்சிறுகதையில் பெண்ணான தாரணிக்கு உறுதுணையாக நிற்கிறார். தாரணியைப் போல இந்த உலகத்தில் எத்தனையோ பெண்களுக்கு இது போன்ற சிக்கல்கள் உள்ளன. மனதளர்ச்சி அடையக் கூடாது. வாழ்க்கையில் பல இன்னல்கள் இருந்தும் அதைக் கடக்க மனப்பக்குவத்தையும் மன உறுதியையும் தேவை என்றும் பெண்களுக்கு எதையும் மனம் தாங்கும் வலிமை வேண்டும் என்றும் வலியுறுத்துகிறார் பெண் எழுத்தாளரான லட்சுமி.